# மார்ச் – 2023

## அரசியல் அறிவியல்

1. **2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச யோகா விழா ரிஷிகேஷில்** நடைபெறவுள்ளது.
2. **'மழை நீர் சேமிப்பு 2023'** எனும் பிரச்சாரத்தை குடியரசுத்தலைவர் **திரௌபதி முர்மு** அவர்கள் புது டெல்லியில் அறிமுகப்படுத்தினார். பிரச்சாரத்தின் கருத்துரு குடிநீர் வளங்களின் நிலைத்தன்மை என்பதாகும்.
3. **அவுரங்காபாத்** நகரின் பெயர் **சத்ரபதி சாம்பாஜி நகர்** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
4. திருநங்கை சமூகங்களைச் சார்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து வாக்களிக்களிப்பதை ஊக்குவிப்பதற்காக தேர்தல் ஆணையமானது, கர்நாடகா நாட்டுப்புற நடனக் கலைஞரான **மஞ்சம்மா ஜோகதி** என்ற திருநங்கையை தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரகராக தேர்வு செய்துள்ளது.
5. **ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது** (PFRDA) ஆம்புட்ஸ்மேன் வயது வரம்பை 65 ஆண்டுகளில் இருந்து **70** ஆக உயர்த்தியுள்ளது.

## செய்திகளில் இடம் பெற்ற முக்கிய பாதுகாப்பு நடவடிக்கைகள்

| பாதுகாப்பு நடவடிக்கைகளின் பெயர் | நடத்தியவர்கள் | நோக்கம் |
|---|---|---|
| **ஆபரேஷன் திரிசூல்** | சி.பி.ஐ | குற்றச் செயல்களில் ஈடுபட்டு தப்பியோடியவர்களை இந்தியாவுக்கு அழைத்து வருதல் |
| **ஆபரேஷன் இன்டர்பிலெக்ஸ்** | இங்கிலாந்து (UK) | உக்ரைனுக்கான இராணுவ மற்றும் நிதி ஆதரவிற்காக 2.3 **பில்லியன் யூரோவினை** தனது பங்காக UK வழங்குதல் |

## செய்திகளில் இடம் பெற்ற முக்கிய குழுக்கள்

| குழுவின் பெயர் | குழுவை நியமித்தது | நோக்கம் |
|---|---|---|
| **நீதிபதி தீபக் வர்மா குழு** | | இந்தியாவில் சிறை பிடிக்கப்பட்ட வன விலங்குகளின் இடமாற்றம் மற்றும் இறக்குமதியை மேற்பார்வையிடல். |
| **கிரித் பரிக் குழு** | | இந்தியாவில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை எரிவாயுக்கான தற்போதைய விலை சூத்திரத்தை மறுமதிப்பாய்வு செய்தல் |

| | | |
|---|---|---|
| வி திருப்புகழ் குழு | தமிழக அரசு | தமிழகத்தில் வெள்ள மேலாண்மை குறித்த அறிக்கையை சமர்ப்பித்தல். |

## செய்திகளில் இடம் பெற்ற திட்டங்கள்

| திட்டத்தின் பெயர் | தொடங்கிய அமைப்பு | நோக்கம் |
|---|---|---|
| **DNT சமூகங்களின் பொருளாதார வலுவூட்டலுக்கான திட்டம் (SEED)** | MOSJE | DNT சமூகங்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக |
| **"புதிய இந்தியா எழுத்தறிவு திட்டம்" (NILP)** | **2022-23** நிதியாண்டு முதல் **2026-27** வரை செயல்படுத்தப்படும் | 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுதப் படிக்க தெரியாத 5 கோடி பயனாளிகளுக்கு அடிப்படை எழுத்தறிவு கல்வியை வழங்கிடுதல் |
| **லீன் (LEAN) திட்டம்** | MSME | இந்தியாவில் MSMEக்கான போட்டித்தன்மையை அதிகரிக்க முறையான செயல்திட்டத்தை வழங்குதல் |
| **சமர்த் (SAMARTHI)** | **ஜவுளி அமைச்சகம்** | **10 இலட்சம்** இளைஞர்களின் திறன் மேம்பாட்டை இலக்காகக் கொண்ட வேலை வாய்ப்பு சார்ந்த திட்டம் |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## செய்திகளில் முதல் முறை

1. **சுகாதார உரிமை மசோதாவை (RTH)** நிறைவேற்றிய முதல் மாநிலம் **ராஜஸ்தான்**
2. **ஆஸ்திரேலியாவின் டீக்கின் (Deakin) பல்கலைக்கழகம் - இந்தியாவின் முதல் வெளிநாட்டு பல்கலைக்கழகம்,** குஜராத்தின் சர்வதேச ஃபின்டெக் (GIFT) நகரத்தில் வரவுள்ளது.
3. **பஞ்சாப் மற்றும் ஹரியானா நீதிமன்றம் நாட்டிலேயே முதன்முறையாக** ஒரு குற்றவியல் வழக்கில் **ஜாமீன் மனு** தொடர்பாக முடிவெடுக்க ChatGPT எனப்படும் AI சாட்போட்டின் உதவியைப் பயன்படுத்தியது. இதனை நீதிபதி **அனூப் சிட்காரா** தலைமையிலான அமர்வு விசாரித்தது.
4. **200 மீட்டர் நீளமுள்ள** உலகின் முதல் **மூங்கில் தடுப்புச் சுவர் மகாராஷ்டிராவில் யவத்மால் மற்றும் சந்திராபூர் ஆகிய** மாவட்டங்களை இணைக்கும் நெடுஞ்சாலையில் நிறுவப்பட்டுள்ளது.

5. இந்திய இரயில்வேயின் முதல் **கதி சக்தி சரக்கு முனையம் அசன்சோல்** பிரிவில் தொடங்கப்பட்டது.

6. இந்தியாவின் 1 வது மற்றும் உலகின் 2 வது – **100% மெத்தனால் ஆல் இயங்கும் முன்மாதிரி டிரக் பெங்களூருவில்** வெளியிடப்பட்டது. **M100 என்பது இந்தியன்** ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் உடன் இணைந்து **நிதி ஆயோக்** மேற்கொண்ட முன்முயற்சியாகும்

7. **டெர்ரான் 1** என்ற உலகின் முதல் 3டி அச்சிடப்பட்ட இராக்கெட்டை விண்ணில் செலுத்திய போது சுற்றுவட்டப்பாதையை அடைய முடியாமல் தோல்வியுற்றது.

8. தாய் மற்றும் தந்தையர்களுக்கு ஒரே மாதிரியான பேறுகால விடுப்பு வழங்கிய உலகின் **முதல்** நாடு **ஸ்பெயின்** ஆகும். 16 வாரங்கள், முழு ஊதியத்துடன் கூடிய மாற்ற முடியாத விடுப்பு வழங்கப்படும்.

9. **இந்தியா-வங்காளதேச நட்புக் குழாய் (IBFP)** என்பது **சிலிகுரியில்** இருந்து **பர்பதிபூர்** வரை அமைக்கப்பட்ட, இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் இடையேயான **முதல் எல்லை தாண்டிய ஆற்றல் குழாய்** ஆகும். இது ஆண்டுக்கு **1 மில்லியன் மெட்ரிக் டன்** அதிவேக டீசலை வங்காளதேசத்திற்கு கொண்டு செல்லும் திறன் கொண்டது.

10. **உலகின் முதல் மணல் பேட்டரியை ஃபின்லாந்து** நிறுவியுள்ளது. இதனால் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து பல மாதங்களுக்கு வெப்பத்தை சேமிக்க முடியும்.

11. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்(SCO) முதல் **சுற்றுலா மற்றும் கலாச்சார தலைநகரமாக காசி** அறிவிக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## *பொருளாதாரம்*

1. **QR-குறியீடு அடிப்படையிலான நாணய விற்பனை இயந்திரத்தின் (பணமில்லா நாணயம் வழங்கும் இயந்திரம்)** செயல்பாட்டை மதிப்பிடுவதற்கு **இந்திய ரிசர்வ் வங்கி ஒரு முன்னோடித் திட்டத்தைத் தொடங்க உள்ளது.**

2. **$1 பில்லியன் சிண்டிகேட் சமூக கடன் வசதியை** நிறைவு செய்வதாக SBI அறிவித்தது. இது ஆசிய பசிபிக் பகுதியில் உள்ள வணிக வங்கியின் மிகப்பெரிய **சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) கடன்** ஆகும். மேலும் இது **உலகளவில் இரண்டாவது** பெரிய சமூகக் கடனாகும்.

3. **SWAYATT என்பது ஸ்டார்ட்அப்கள், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான** அரசாங்க இ-சந்தைப்பகுதிகளில் (GeM) **மின்-பரிவர்த்தனைகளின்** பலன்களை அதிகரிக்க முயலும் திட்டமாகும்.

4. **ஜப்பானின் ஆசிய ஆற்றல் மாற்ற முயற்சியானது (AETI)** 2021 இல் தொடங்கப்பட்டது. இம்முயற்சியானது **புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திக்கான 10 பில்லியன் அமெரிக்க டாலர் நிதி உதவி உட்பட நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கு ஆசியான் நாடுகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டது.**

5. 2014-15ல் இருந்து இந்தியாவின் தனிநபர் வருமானம் பெயரளவிலான அடிப்படையில் **ரூ. 1,72,000 என இரு மடங்காக உயர்ந்துள்ளது என NSO மதிப்பிட்டுள்ளது. உண்மையான அடிப்படையில்** தனிநபர் வருமானம் 2014-2025ல் இருந்து 35% அதிகரித்துள்ளது.

6. **BSE மற்றும் UN Women India ஆகியவற்றின் புதிய முயற்சியான FinEMPOWER, மும்பை பங்குச் சந்தையில் (BSE)** அறிமுகப்படுத்தப்பட்டது.

7. **இணைய வணிகத்தின் உலகளாவிய முதலீட்டில்** இந்தியா 2 வது இடத்தில் உள்ளது. இதில் பெங்களூர் இந்தியாவில் முதலிடத்தில் உள்ளது (டீல்ரூம் நிறுவனத்தின் முதலீட்டுத் தரவுகளின் பகுப்பாய்வு)

8. புவிசார் குறியீட்டைப் பெற்ற பொருட்களில் இந்தியாவிலிருந்து ஜெர்மனிக்கு ஏற்றுமதியாகும் முதல் பொருளாக **காஷ்மீர் தரைவிரிப்புகள்** உள்ளன.

9. **மகாராஷ்டிராவில் உள்ள இந்திராணியில் (புனே) மருத்துவநகரம்** அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து வகையான சிறப்பு சிகிச்சைகளையும் ஒரே இடத்தில் வழங்கும் நாட்டின் முதல் நகரமாக இது இருக்கும்.

10. இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு (IREDA) **உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்திற்கான (IFC) அந்தஸ்தை** RBI வழங்கியுள்ளது.

11. ஏப்ரல் 1, 2023 முதல் தயாரிக்கப்படும் அனைத்து தங்க நகைகளிலும் **6 இலக்க HUID அடையாளம்** (ஹால்மார்க் தனித்துவ அடையாளம்) கட்டாயமாக்கப்படுகிறது.

12. நுகர்வோர் பொருட்கள், மின்னணு சாதனங்கள், தானியங்கிகள் மற்றும் வேளாண் உபகரணங்கள் ஆகிய நான்கு துறைகளை உள்ளடக்கும் வகையில், மத்திய அரசு அதன் **பழுதுபார்ப்பு உரிமை (RTR) முயற்சியை** விரிவுபடுத்தியுள்ளது.

13. **இந்திய தரநிலைகள் பணியகத்தின்,** தென் மண்டல அலுவலகமானது (சென்னை) பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களுக்கான **சான்றிதழ் உரிமத்தை** தென் பிராந்தியத்தில் முதல் முறையாக கர்நாடகாவில் உள்ள **நந்தினி மெகா ஹைடெக் பவுடர் ஆலைக்கு வழங்குகிறது.**

14. **PM மித்ரா பூங்கா 7 மாநிலங்களில்** தொடங்கப்படுகிறது (பிரதான் மந்திரி ஒருங்கிணைந்த மெகா ஜவுளி மண்டலம் மற்றும் ஆடை பூங்கா)

| | |
|---|---|
| தமிழ்நாடு | தெலுங்கானா |
| குஜராத் | கர்நாடகா |
| மத்தியப் பிரதேசம் | உத்திரப்பிரதேசம் |
| மகாராஷ்டிரா | |

15. **புதுமை பெண்** திட்டத்திற்காக **பேங்க் ஆஃப் பரோடா** மற்றும் **தமிழ்நாடு அரசு** இணைந்து ஒருபுதிய பற்று அட்டையை அறிமுகப்படுத்துகிறது.

16. **herSTART:** பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்குவித்தல். பெண்கள் தலைமையிலான தொடக்க நிறுவனங்களுக்கு ஒரு வருடத்திற்கு மாத உதவித்தொகையாக **ரூ 20000 வழங்கப்படும்.**

17. இந்திய ரிசர்வ் வங்கியின் கிரீன்ஃபீல்ட் **தரவு மையம்** மற்றும் **சைபர் செக்யூரிட்டி பயிற்சி நிறுவனம் புவனேஸ்வரில்** அமையவுள்ளது.

18. இந்தியா அதிகபட்சமாக அமெரிக்காவிற்கு (18%)> அமீரகம் (6%)> சீனா (5%)> வங்காளதேசத்திற்கு ஏற்றுமதி செய்கிறது . இந்தியாவின் இலக்கு: 2030 க்குள் 2 டிரில்லியன் டாலர் ஏற்றுமதியை எட்டுவதாகும்.

19. நடப்பு நிதியாண்டில், 2023ல், இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதி, இதுவரை இல்லாத அளவுக்கு, **750 பில்லியன்** டாலரை எட்டியுள்ளது.

## புவியியல்

20. **தியோகர், கியோஞ்சர் மற்றும் மயூர்பஞ்ச்** உள்ளிட்ட ஒடிசாவின் மூன்று மாவட்டங்களில் வெவ்வேறு இடங்களில் தங்கப் படிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

21. **ஃபிரெடி சூறாவளி 32 நாட்கள்** செயலில் இருந்தது. WMO இன் தகவலின் படி பதிவான **மிக நீண்ட வெப்பமண்டல சூறாவளி இதுவாகும்.** இது மஸ்கரீன் தீவுகள், மடகாஸ்கர் மற்றும் மொசாம்பிக் ஆகிய பகுதிகளைப் பாதித்தது.

22. பூமியின் மையப்பகுதியில் **ஐந்தாவது அடுக்கு இருப்பதை** விஞ்ஞானிகள் உறுதிப்படுத்துகின்றனர். ஐந்தாவது அடுக்கானது உட்கருவின் உள்பகுதியில் உள்ள பொருட்களான **இரும்பு மற்றும் நிக்கல்** ஆகியவற்றால் ஆனது.

23. வேளாண் அமைச்சகமானது, IFFCO அமைப்பு மற்றும் கோரமண்டல் இன்டர்நேஷனல் என்ற தனியார் நிறுவனம் ஆகியவை இணைந்து **நானோ DAP (டை-அம்மோனியா பாஸ்பேட்)** என்ற உரத்தின் உற்பத்தியைத் தொடங்க 3 ஆண்டுகளுக்கு அனுமதித்துள்ளது.

24. ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுக்கான (MIDH) திட்டத்தின் கீழ் தோட்டக்கலைப் பயிர்களுக்கான சிறப்பு மையம் அமைக்கப்படும்.

| | |
|---|---|
| டிராகன் பழம் | பெங்களூர் |
| மாம்பழம் மற்றும் காய்கறிகள் | ஜெய்ப்பூர் |
| காய்கறிகள் மற்றும் பூக்கள் | போண்டா (கோவா) |

25. **PM பிராணம்** (மாற்று ஊட்டச்சத்துக்களை மேம்படுத்தலுக்கான வேளாண் மேலாண்மை திட்டம்) - **உயிர் உரங்கள்** மற்றும் **கரிம உரங்களுடன்** இணைந்து **உரங்களின் சீரான பயன்பாட்டை** ஊக்குவிக்குவித்தல்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## சுற்றுச்சூழல்

1. சர்வதேச **எரிசக்தி நிறுவனமானது** (IEA) 2023 ஆம் **ஆண்டிற்க்கான உலகளாவிய மீத்தேன் கண்காணிப்பு அறிக்கையின் வருடாந்திர பதிப்பை வெளியிட்டது.**

2. **மார்ச் 3, 2023இல் CITES என்ற அமைப்பின்** 50 ஆவது ஆண்டு நிறைவு தினம் அனுசரிக்கப்படுகிறது. மேலும் இது UN பொதுச் சபையால் கொண்டாடப்படுகிறது.

3. புலி, சிங்கம், சிறுத்தை, பனிச்சிறுத்தை, பூமா, ஜாகுவார் மற்றும் சிவிங்கிப் புலி ஆகிய **ஏழு** பெரிய பூனை இனங்களை பாதுகாக்க **சர்வதேச பெரிய பூனைகள் கூட்டணியை (IBCA)** உருவாக்க இந்தியா முன்மொழிந்துள்ளது.

4. **கிராமின் கிருஷி மவுசம் சேவா திட்டம் (GKMS) –** வானிலை தகவல் அடிப்படையிலான பயிர்/கால்நடை மேலாண்மை உத்திகள் மற்றும் செயல்பாடுகளை வழங்குதல்.

5. கிர் தேசிய பூங்காவில் இருந்து 40 சிங்கங்களை இடமாற்றம் செய்து **ஆசிய சிங்கங்களுக்கான 2வது** வாழிடத்தை **குஜராத்தில்** உள்ள **பர்தா வனவிலங்கு சரணாலயத்தில்** உருவாக்க முன்மொழியப்பட்டது.

6. **பெல்கிரேட் (செர்பியா)** என்ற நகரமானது காற்று மாசுபாட்டை தணிப்பதற்காக, ஒரு நகர்ப்புற ஒளி சார் – உயிர் வினைகலனான **திரவ மரத்தை** அறிமுகப்படுத்தியுள்ளது. பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைக்கும் வகையில் இது தண்ணீர் மற்றும் **நுண் பாசிகளைக் கொண்டுள்ளது.**

7. **ஹரியானா, இராஜஸ்தான், குஜராத் மற்றும் டெல்லி ஆகிய** நான்கு மாநிலங்களில் பரவியுள்ள ஆரவல்லி மலைத்தொடரைச் சுற்றியுள்ள **5 கிலோமீட்டர் இடையகப் பகுதியில்** பசுமை வழித்தடங்களை உள்ளடக்கும் முயற்சியே **ஆரவல்லி பசுமைச் சுவர் திட்டம் ஆகும்.** (வழிகாட்டி: ஆப்பிரிக்காவின் பெரிய பசுமை சுவர் திட்டம், 2007)

8. தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயத்தை மாநிலத்தின் 18வது வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது

9. **வேம்பநாடு** மற்றும் **அஷ்டமுடி ஏரிகளை** (ராம்சர் சதுப்பு நிலங்களின் பட்டியலில் இடம்பெற்ற) பாதுகாக்கத் தவறிய கேரள அரசுக்கு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT) **10 கோடி ரூபாய்** அபராதம் விதித்துள்ளது.

10. **ஸ்வச்சோத்சவ்** 2023 : 2024க்குள் **1000 நகரங்களை 3-நட்சத்திர குப்பை இல்லாத நகரங்களாக** மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

11. தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த **75 சதுப்பு நிலங்களை** ஆரோக்கியமாக மற்றும் திறம்பட நிர்வகிக்கப்படும் வலையமைப்பின் நோக்கத்துடன் 2022 இல் **மிஷன் சஹ்பகீதாவை** MoEFCC அறிமுகப்படுத்தியது.

12. **ISFR அறிக்கை** 2021 இன் படி , (முந்தைய மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போது, அதாவது ISFR 2019)

| | | |
|---|---|---|
| **நாட்டில் காடுகளின் மொத்த பரவல்** | பரப்பளவு அடிப்படையில் | **7,13,789 கிமீ 2** |
| | புவியியல் பரப்பின் அடிப்படையில் | 21.72% |
| **நாட்டில் காடுகளின் மொத்த பரவல்** | | 1540 கிமீ 2 அதிகரித்துள்ளது |
| **மரங்களின் பரவல்** | | 721 கிமீ 2அதிகரித்துள்ளது |
| **மொத்த காடு மற்றும் மரங்களின் பரவல்** | | 2261கிமீ2அதிகரித்துள்ளது |

## *அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்*

1. **CE -20 என்ற கிரையோஜெனிக் இயந்திரம்** அதன் சோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்தது. இது **LVM3-M4 ராக்கெட்டின் கிரையோஜெனிக் மேல்நிலையை** மேம்படுத்தும். மேலும் இந்த எஞ்சின் **சந்திரயான்-3** ஏவுதலுக்கு பயன்படுத்தப்படும்.
2. **"சிப் 4" அல்லது "ஃபேப் 4" கூட்டணியில் உலகின் நான்கு முக்கிய குறைகடத்தி உற்பத்தியாளர்கள் உள்ளனர்: அமெரிக்கா, ஜப்பான், தைவான் மற்றும் தென் கொரியா.**
3. POTS அல்லது postural orthostatic tachycardia syndrome என்பது நரம்பு மண்டலத்தில் ஏற்படும் ஒரு கோளாறு ஆகும். இந்நோயானது எழுந்து நின்று அல்லது படுத்த பிறகு இதயத் துடிப்பு வேகமாக உயர்வதாக வகைப்படுத்தப்படுகிறது.
4. **கேப் கனாவரலில்** அமைந்துள்ள **நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து Crew-6 விண்கலம்** ஏவப்பட உள்ளது. இது நாசா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் ஆகிய இரு நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் உருவானதாகும். இவ்விண்கலம் ஃபால்கன் 9 இராக்கெட் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும்.
5. **NRI ஆராய்ச்சியாளர்களுக்கான வைபவ் புத்தாய்வு திட்டமானது** (அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்) **இந்திய வம்சாவளி ஆராய்ச்சியாளர்களை** இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு **அதிகபட்சமாக இரண்டு மாதங்களுக்கு** அழைத்து வர வாய்ப்பளிக்கிறது.
6. **நாசா மற்றும் இஸ்ரோ** இணைந்து உருவாக்கிய **நிசார் என்ற புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை** இந்திய விண்வெளி நிறுவனத்திடம் அமெரிக்கா ஒப்படைத்தது . 2,800 கிலோகிராம் எடை கொண்ட இந்த செயற்கைக்கோள் **L-band மற்றும் S-band செயற்கை துளை ரேடார் (SAR)** கருவிகளைக் கொண்டுள்ளது.
7. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) என்ற அமைப்பு இன்ஃப்ளுயன்ஸாவின் **துணை வகையான H3N2 என்பது** சுவாச நோயை ஏற்படுத்துகிறது என்பதை உறுதிப்படுத்தியது. (இன்ஃப்ளுயன்ஸா ஏ வைரஸ்)

8. **அட்டகாமா பெரிய மில்லிமீட்டர் / சப்மில்லிமீட்டர் வரிசை (ALMA)** என்ற தொலைநோக்கியனது, **V883 ஓரியோனிஸ்** என்ற நட்சத்திரத்தை சுற்றி அமைந்துள்ள கோள்வடிவ வட்டில் **வாயு நீரைக்** கண்டுபிடித்தது.

9. **ரோசெஸ்டர் பல்கலைக்கழகம் "ரெட்மேட்டர்"** என்ற புதிய மீக்கடத்தியை உருவாக்கியுள்ளது. **ஹைட்ரஜன்** மற்றும் **நைட்ரஜனுடன் லூட்டியத்தை** இணைப்பதன் மூலம் இது உருவாக்கப்பட்டது.

10. உலக வங்கி மற்றும் மத்திய அரசு இணைந்து பொது சுகாதார உள்கட்டமைப்புக்காக இந்தியாவிற்கு **$1 பில்லியன்** வழங்குகின்றன. இது இந்தியாவின் முதன்மை திட்டமான **பிரதான் மந்திரி-ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு இயக்கத்திற்கு** (PM-ABHIM) வலுசேர்க்கும்.

11. யுவிகா (YU VA VI GYANI KA RYAKARAM) — பள்ளி மாணவர்களுக்கான இளம் விஞ்ஞானி நிகழ்ச்சி இஸ்ரோவால் நடத்தப்படுகிறது.

12. **இஸ்ரோவின் இந்தியா நிலச்சரிவு குறியீடு:** உத்தரகாண்டின் **ருத்ரபிரயாக்** முதலிடத்திலும் மற்றும் **தெஹ்ரி கர்வால்** இரண்டாவது இடத்திலும் உள்ளன.

13. புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உருவான **ஆராய்ச்சி, கல்வி மற்றும் பயிற்சி வெளியீடு (REACHOUT)** திட்டமானது புவி அமைப்பு அறிவியலின் (RDESS) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் (R&D) திறனை அதிகரிப்பதாகும்

14. **C-வேதா** என்பது **இந்தியா – ஐக்கிய நாடுகள் (UK)** ஆகியவற்றின் ஒருங்கிணைந்த திட்டமாகும். இது இந்தியாவில் மிகப்பெரிய நரம்பியல் வளர்ச்சி தரவுத்தளத்தை ஏற்படுத்தும் நோக்கில் ICMR மற்றும் UK-வின் மருத்துவ ஆராய்ச்சி குழுவில் உள்ள நியூட்டன் கிராண்ட் உடன் இணைந்து நிதியளிக்கிறது.

15. 2023 ஆம் ஆண்டுக்கான **QS உலகப் பல்கலைக்கழக தரவரிசையில் முதல் 50 பொறியியல் நிறுவனங்களில் டெல்லியிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம்** இடம் பெற்றுள்ளது.

16. ஆசியாவின் மிகப்பெரிய 4மீ அளவு கொண்ட சர்வதேச திரவ ஆடி தொலைநோக்கியானது உத்தரகாண்டில் உள்ள தேவஸ்தாலில் திறக்கப்பட்டது.

17. இஸ்ரோவின் கன ஏவுகணை வாகனமான **LVM3யானது ஒன்வெப்பின் 36 செயற்கைக்கோள்களை** புவியின் தாழ்நிலை சுற்றுவட்டப்பாதையில் (LEO)**நிலைநிறுத்தி தொடர்ந்து** ஆறாவது முறையாக வெற்றி கண்டது.

18. **ஓமுவாமுவா** என்பது ஒரு **வால் நட்சத்திரம்** ஆகும். நமது சூரிய குடும்பத்திற்குள் காணக்கூடிய முதல் விண்மீன் பொருள் இது இருக்கும். முன்னதாக இது ஏலியன்களின் ஆய்வு விண்கலம் என கருதப்பட்டது.

19. இந்தியாவின் **முதல் குவாண்டம் கம்யூனிகேஷன் டெலிகாம்** நெட்வொர்க் இணைப்பு இந்திய தலைநகரான டெல்லியில் நிறுவப்பட்டது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

20. **மார்பர்க் வைரஸ் நோய்** என்ற கொடிய பெருந்தொற்றானது **தான்சானியாவில்** பரவி வருவதாக அறிவிக்கப்பட்டது.

21. **பாலில் கலப்படத்தைக் கண்டறிய ஐஐடி மெட்ராஸ்** ஆராய்ச்சியாளர்கள் செலவு குறைந்த மற்றும் எடுத்துச் செல்லக்கூடிய, கைக்கு அடக்கமான **ஒரு முப்பரிமாண காகித அடிப்படையிலான** சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.

## *சர்வதேச செய்திகள்*

1. **வின்ட்சார் கட்டமைப்பு UK மற்றும் EU** இடையே கையெழுத்தானது. இது **வடக்கு அயர்லாந்து நெறிமுறையில்** ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான சரக்குகளின் இயக்கத்தில் உள்ள சிக்கலைத் தீர்க்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

2. உக்ரைனுக்கு எதிரான போரில் **கின்சல்ஸ் அல்லது டாகர்ஸ்** எனப்படும் ஆறு ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை ரஷ்யா பயன்படுத்தியது.

3. 2023 இறுதிக்குள் ஐக்கிய நாடுகளின் (UN) குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளின் (LDC) பட்டியலில் இருந்து பட்டம் பெற்ற **ஏழாவது நாடாக பூடான்** சிறப்பு பெறுகிறது.

4. **தோஹா செயல் திட்டம் (DPoA)** என்பது 10 ஆண்டு காலத் திட்டமாகும் (2022-2031). இது UN வெளியிட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDG) அடைய உலகின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய 46 நாடுகளைத் தேர்ந்தெடுத்து அவைகளை நற்பாதையில் கொண்டுவருதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

5. உக்ரைனில் நடந்த போர்க்குற்றங்களுக்காக **விளாடிமிர் புதினுக்கு** சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது வாரண்ட் பிறப்பித்துள்ளது.

6. **கருங்கடல் தானிய ஒப்பந்தத்தை** 60 நாட்களுக்கு நீட்டிக்க ரஷ்யா ஒப்புக்கொண்டது. கருங்கடலில் வணிக நடைவடிக்கைகளுக்கு தடை இருப்பதால் விநியோகச் சங்கிலியில் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனால் உணவுப் பொருட்களின் விலைகளை சமாளிக்க **உக்ரைனுக்கும் ரஷ்யாவிற்கும்** இடையே BSGI என்ற **கருங்கடல் தானிய ஒப்பந்தத்தை** ஐ நா சபை ஏற்படுத்தியது.

7. **BRICS அமைப்பின் வங்கியான NDBயில் 4 வது** புதிய உறுப்பினராக எகிப்து இணைகிறது.

8. அமெரிக்காவின் செனட் சபை தனது தீர்மானத்தில், சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே சர்வதேச எல்லையாக இருக்கும் மக்மோகன் எல்லைக் கோட்டினை அங்கீகரித்தது.

9. **C+1 செயல்திட்டம்** என்பது சீனாவில் மட்டும் முதலீடு செய்வதைத் தவிர்ப்பது அல்லது சீனாவிலிருந்து விலகிச் செல்வது மற்றும் தங்களின் வணிக நடைவடிக்கைகளை மற்ற நாடுகளிலும் பரவலாக்குதல் போன்ற பன்னாட்டு செயல்திட்டத்தைக் குறிக்கிறது.

10. **சவுதி அரேபியா,** ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடாகிறது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## தேசிய செய்திகள்

1. **பெங்களூருவில் உள்ள மத்திய மின் ஆராய்ச்சி நிறுவனத்தின் (CPRI)** வளாகத்தில் **பிம்ஸ்டெக் எரிசக்தி மையத்தை (BEC)** இந்தியா நிறுவ உள்ளது.

2. **ஸ்வச்சதா திட்டத்தில் முன்னணியாக விளங்குபவர்களுக்கான (WINS) விருதுகளானது,** MoHUA அமைச்சகத்தால் துப்புரவு மற்றும் கழிவு மேலாண்மையில் பெண்களின் பங்களிப்பை முன்னிலைப்படுத்த வழங்கப்படுகிறது.

3. **குடும்பஸ்ரீ** இயக்கத்தின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வியக்கம் **1998இல் கேரளாவில்** தொடங்கப்பட்டது.

4. தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், **முதுமலை யானைகள் முகாமில்** எடுக்கப்பட்ட ஆஸ்கார் விருது பெற்ற **'தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ்'** என்ற ஆவணப்படத்தில் இடம்பெற்ற இளம் யானைக்குட்டி **'ரகு'வின்** பராமரிப்பாளர்களான **திரு. பொம்மன் மற்றும் திருமதி பெல்லி** ஆகியோர்களுக்கு பாராட்டுக் கேடயமும், ரூ.1 லட்சத்திற்கான காசோலையும் வழங்கினார். இவர்கள் **காட்டுநாயக்கன்** என்ற பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள்.

5. **டைம் இதழ் 2023 இன் உலகின் 50 சிறந்த இடங்களின்** பட்டியல்

| | |
|---|---|
| ஒடிசாவில் உள்ள மயூர்பஞ்ச் | அபூர்வமான புலிகளுக்கும், பழமையான கோவில்களுக்கும் |
| லடாக் ஒன்றியப் பிரதேசம் | சாகசம் மற்றும் உணவுக்காக |

6. ஒடிசா அரசானது பர்கார் மற்றும் **பல்லங்கிர்** மாவட்டத்தில் உள்ள **கந்தமர்தன் மலைத்தொடரை பல்லுயிர் பாரம்பரிய தளமாக** அறிவித்துள்ளது

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## தமிழ்நாட்டுச் செய்திகள்

1. **ஆசியாவின் மிகப்பெரிய மூன்று நாள் உச்சிமாநாட்டான** Umagine ஐ சென்னையில் நடத்தவுள்ளது. இதனை **தமிழ்நாடு மின்னணு நிறுவனமானது (ELCOT)** பிரான்சுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

2. **காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு மாநில செயல்** திட்டத்தின் கீழ், ஒரு விரிவான நகர்ப்புற குளிரூட்டும் திட்டத்தை உருவாக்க ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்துடன் (UNEP) தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

3. சிவகங்கை மாவட்டத்தில் உள்ள **கீழடி அருங்காட்சியகத்தை** முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மார்ச் 5, 2023 அன்று திறந்து வைத்தார்.

4. TN அரசாங்கம் அதன் **“TN எத்தனால் கலப்பு கொள்கை 2023”** ஐ வெளியிட்டது

**இலக்குகள்:**

- மதிப்பிடப்பட்ட **130 கோடி லிட்டர் எத்தனால் கலப்பு தேவையை பூர்த்தி செய்ய.**
- வெல்லப்பாகு/தானியம் சார்ந்த எத்தனால் உற்பத்தித் திறனில் **ரூ.5000 கோடி** மதிப்புள்ள முதலீடுகளை ஈர்க்க.

5. தமிழ்நாடு அரசு **“MSME இணைப்பு 2023”** அறிவித்துள்ளது - MSE களுக்கான பொது கொள்முதல் கொள்கையை திறம்பட செயல்படுத்துவதற்காக **கொள்முதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவை (PMS)** வழங்குவதற்காக விற்பனையாளர் மேம்பாட்டுத் திட்டம் சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

6. தமிழ்த்துறை மூலம் மூத்த தமிழ் அறிஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி ரூ.3500 வழங்கப்படும்.

| |
|---|
| **வயது வரம்பு - 58 வயதுக்கு கீழ்** |
| **வருமான வரம்பு: ரூ.72000க்கு கீழ்** |

7. கமலம் சின்னசாமிக்கு அவ்வையார் விருது வழங்கப்பட்டது

8. திருவள்ளூர் மாவட்டத்தில் குழந்தை பாலின விகிதத்தை மேம்படுத்தியதற்காக திருவள்ளூர் ஆட்சியர் **ஆல்பி ஜான் வர்கீஸ் அவர்களுக்கு சிறந்த ஆட்சியருக்கான விருது பெற்றார்.**

9. பல மாடி கட்டிடங்களில் மின்தூக்கியை பழுதுபார்க்கும் போது ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க புதிய கருவிகளைக் கண்டுபிடித்ததற்காக **சேலம் மாவட்டத்தைச்** சேர்ந்த **எம்.இளம்பிறைக்கு** 2022-23 ஆம் ஆண்டுக்கான **பெண் குழந்தைகள் அதிகாரமளித்தல்** விருது வழங்கப்பட்டது.

10. கல்லூரி மாணவர்களிடையே தமிழர்களின் பாரம்பரியத்தையும் தமிழின் பெருமையையும் பறைசாற்றும் வகையில் **“மாபெரும் தமிழ் கனவு”** என்ற பண்பாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

11. காசநோயால் பாதிக்கப்பட்ட மக்களிடையே இறப்பு விகிதத்தைக் குறைக்க தமிழ்நாடு காசநோய் இறப்பில்லா திட்டம் (TN-KET) தொடங்கப்பட்டது.

12. இந்தியாவின் **முதல் PM மித்ரா பூங்கா** தமிழ்நாட்டின் **விருதுநகர் மாவட்டத்தில் உள்ள E-குமாரலிங்கபுரத்தில்** நிறுவப்பட உள்ளது.

13. சென்னை மாநகராட்சியில் **மக்களைத் தேடி மேயர்** திட்டம் தொடங்கப்பட்டது

14. **வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டு விழாவை** தமிழக அரசு கொண்டாடுகிறது. **ஒடுக்கப்பட்டோர் நலனுக்காக பாடுபடும் தனிநபர்கள் அல்லது அமைப்புகளுக்கு** ஆண்டுதோறும் '**வைக்கம் விருது**' வழங்கப்படும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

15. **மகளிர் உரிமைத் தொகை** (பெண்களுக்கான உரிமைத் தொகை) செப்டம்பர் 15 முதல் தகுதியான குடும்பத் தலைவிகளுக்கு **ரூ. 1000** வழங்கப்படும்.

16. **முன்னாள் முதல்வர்** கருணாநிதியால் தொடங்கப்பட்ட தமிழ்நாடு மாநில காவல்துறையின் மகளிர் பிரிவின் பொன்விழா (1973) கொண்டாடப்பட்டது.

    அ) பெண் காவலர்களுக்கான **நவரத்னா திட்டங்கள்**

    ஆ) அவள் **(விழிப்புணர்வு மற்றும் கற்றல் மூலம் வன்முறையைத் தவிர்த்தல்)** திட்டம் தொடங்கப்பட்டது. இது பெண்களின் தற்காப்புத் திறனைப் பாதுகாத்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

17. **புன்னகைத் திட்டம் - மாணவர்களின் பல் பராமரிப்புக்காக** தொடங்கப்பட்டது

## *விருதுகள்/பரிசுகள்*

| விருது | வழங்குநர் | விருது பெறுநர் | அறியப்படுவது |
|---|---|---|---|
| **போர்ட்டர் பரிசு 2023** | போட்டித்தன்மைக்கான நிறுவனம் (IFC) மற்றும் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் | **சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்** | கோவிட்-19ஐ நிர்வகிப்பதில் அரசாங்கத்தின் உத்தியை அங்கீகரித்தல் |
| **பிரிட்ஸ்கர் விருதுகள்** | **ஹயாட் அறக்கட்டளை** | சர் டேவிட் ஆலன் சிப்பர்ஃபீல்ட் (இலண்டன்) | கட்டிடக்கலை |
| **PEN/நபோகோவ் வாழ்நாள் சாதனையாளர் விருது** | **பென் அமெரிக்கா** | எழுத்தாளர் வினோத் குமார் சுக்லா (சட்டீஸ்கர்) | ஹிந்தி எழுத்தாளர் |
| **மத்திய நீர்ப்பாசனம் மற்றும் மின் வாரியம் (CBIP விருது) 2022** | மத்திய நீர்ப்பாசனம் மற்றும் மின் வாரியம் (1927 முதல்) | பாரத மிகு மின் நிலையம் (BHEL) | சூரிய ஆற்றலில் சிறந்த பங்களிப்புக்காக |
| | | NTPC கழகம் | மின் உற்பத்தியில் சிறந்த பங்களிப்பு |
| **ACI இன் வருடாந்திர சேவை தர விருது.** | சர்வதேச விமான நிலைய குழு | **ஆசிய-பசிபிக் பகுதியில் உள்ள தூய்மையான விமான நிலையங்கள்** – டெல்லி விமான நிலையம் | |

| | | | |
|---|---|---|---|
| | | விமான நிலைய **சேவை தரம் (ASQ) –** இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் (IGIA) | |
| **சுய உதவிக் குழு வங்கி இணைப்பில் சிறப்பாக செயல்பட்டதற்காக தேசிய விருது** | **ஜே & கே வங்கி** | – | ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம் |
| **95 வது ஆஸ்கார் அகாடமி விருதுகள் 2023** | லாஸ் ஏஞ்சல்ஸ், U.S | சிறந்த ஆவணப்படம் **Elephant Whisperers** | ஆஸ்கார் விருதை வென்ற முதல் இந்திய ஆவணப்படம். இயக்கம்: **கார்த்திகி கோன்சால்வ்ஸ்** |
| | | சிறந்த அசல் பாடல்'RRR' படத்தில் நாட்டு நாட்டு பாடலாசிரியர் **சந்திரபோஸ் மற்றும் இசையமைப்பாளர் கீரவாணி** | தயாரிப்பு: DVV **என்டர்டெயின்மென்ட்** இயக்கம் : **எஸ்.எஸ்.ராஜமௌலி** |
| **32 வது வியாஸ் சம்மான் 2022 விருது** | கேகே பிர்லா அறக்கட்டளை | டாக்டர் கியான் சதுர்வேதி (உத்திரப் பிரதேசம்) | இந்தி எழுத்தாளர், பத்மஸ்ரீ விருது பெற்றவர் |
| **சர்வதேச புக்கர் பட்டியல் 2023** | புக்கர் பரிசு அறக்கட்டளை | பெருமாள் முருகன் (13 படைப்புகளின் நீண்ட பட்டியலில் இடம் பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர்) | தமிழாசிரியர் பெருமாளின் ஆங்கில மொழிபெயர்ப்பு முருகனின் நாவல் புக்குளி (பைர்) பட்டியலிடப்பட்டுள்ளது |
| **2023 ஆம் ஆண்டின் ஆளுநர் விருது** | சர்வதேச மத்திய வங்கி வெளியீடு | ஸ்ரீ சக்திகாந்த தாஸ் (ஒடிசா) | RBI ஆளுநர் |
| **தகவல் சங்கத்தின் உலக உச்சி மாநாட்டு (WSIS) விருதுகள் 2023** | சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) | **இணையவழி தணிக்கை** | பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் முழுவதிலும் இணையவழி தணிக்கையை எளிதாக்குதல் |
| **2023 சங்கீதா கலாநிதி விருது** | மெட்ராஸ் மியூசிக் அகாடமி | **பாம்பே ஜெயஸ்ரீ** (கல்கத்தா) | கர்நாடக இசைக் கலைஞர் |

| | | | |
|---|---|---|---|
| **2023 ஏபெல் பரிசு** | **நார்வே பாராளுமன்றம் (தி ஸ்டோர்டிங் )** | **லூயிஸ் கஃபரெல்லி (அர்ஜென்டினா)** | புகழ்பெற்ற கணிதவியலாளர். நேரியல் அல்லாத பகுதி வகைக்கெழுச் சமன் பாட்டிற்கான ஒழுங்குமுறைக் கோட்பாட்டில் அவரது பங்களிப்பு. |
| **குழந்தைகள் சாம்பியன் விருது 2023** | குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான டெல்லி ஆணையம் | **தபோபன்** | அசாமில் உள்ள N.G.O |
| **வனவிலங்கு பாதுகாப்பு விருது 2023** | ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் | **அலியா மிர்** (காஷ்மீர்) | வனவிலங்கு பாதுகாப்பு |
| **எழுத்தாளர்கள் மற்றும் இலக்கியத்திற்கான சார்க் அறக்கட்டளை (FOSWAL)** | சார்க் | **பங்கபந்து ஷேக் முஜிபுர் ரகுமான்** (வங்காளதேசம்) | அவரது புத்தகங்கள்: முடிக்கப் படாத நினைவுகள், சிறை டைரிகள் மற்றும் புதிய சீனா 1952. |
| **'வாழ்நாள் சாதனையாளர் விருது'** | டெக்சாஸ் பல்கலைக்கழகம் | நவீன் ஜிண்டால் (ஹரியானா) | தொழில், அரசியல் மற்றும் கல்வியில் அவர் செய்த சாதனைகளுக்காக |

## *தமிழ்நாட்டிலிருந்து பத்ம விருது பெற்றவர்கள்*

| பத்ம விபூஷன் | - | - |
|---|---|---|
| **பத்ம பூஷன்** | வாணி ஜெயராம் | கலை |
| **பத்ம ஸ்ரீ** | கே கல்யாணசுந்தரம் பிள்ளை | கலை |
| | வடிவேல் கோபால் மற்றும் மாசி சடையன் | சமூக பணி |
| | பாலம் கல்யாண சுந்தரம் | சமூக பணி |
| | கோபாலசாமி வேலுச்சாமி | மருத்துவம் |

## செய்திகளில் இடம்பெற்ற நபர்கள்

| நபர் | செய்திகளில் இடம்பெற்றதற்கான காரணம்? |
|---|---|
| இராஜேஷ் மல்ஹோத்ரா | பத்திரிகை தகவல் பணியகத்தின் (PIB) முதன்மை தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டார். |
| **ரஷ்மி சுக்லா** | சாஸ்திர சீமா பால் (SSB)-ன் பொது இயக்குநராக நியமிக்கப்பட்டார் |
| **அலெஸ் பியாலியாட்ஸ்கி (2022 அமைதிக்கான நோபல் பரிசுக்கான வேட்பாளர்)** | மின்ஸ்கில் (பெலாரஸ்) அவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.<br>ஜனநாயக சார்பு செயற்பாட்டாளர். |
| **தேஜல் மேத்தா** | அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் மாகாணத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தின் முதல் நீதிபதி. |
| **எஸ்.எஸ்.துபே** | தலைமைக் கணக்குத் தணிக்கையாளராக (CGA) நியமிக்கப்பட்டார். |
| **மாணிக் சாஹா** | **திரிபுராவின்** முதலமைச்சராக நியமிக்கப்பட்டார் |
| **கான்ராட் கொங்கல் சங்மா** | **மேகாலயா** முதல்வராக நியமிக்கப்பட்டார் |
| **நெய்பியு ரியோ** | **நாகலாந்து** முதல்வராக நியமிக்கப்பட்டார் |
| **சல்ஹொடியூனோ குருஸ், ஹெகானி ஜக்கலு** | நாகலாந்தின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் (என்டிபிபி கட்சி) |
| **குரூப் கேப்டன் ஷாலிசா தாமி** | **முன்னணி IAF போர் பிரிவுக்கு** தலைமை தாங்கிய முதல் பெண் |
| **சச்சின் டெண்டுல்கர்** | உலகின் முதல் **'ஹேண்ட் அம்பாசிடராக'** சாவ்லானால் நியமிக்கப்பட்டார் |
| **அருண் சுப்ரமணியன்** | நியூயார்க்கில் உள்ள மன்ஹாட்டன் ஃபெடரல் மாவட்ட நீதிமன்றத்தின் முதல் **இந்திய அமெரிக்க நீதிபதி** |
| **கேப்ரியல் போரிக் பாண்ட்** | **சிலியின் 36வது ஜனாதிபதியாக** (2022-2026) நியமிக்கப்பட்டார் |
| **அஜய் பூஷன் பாண்டே** | **தேசிய நிதி அறிக்கை ஆணையத்தின்** தலைவர் |
| **சுரேகா யாதவ்** | ஆசியாவின் முதல் பெண் லோகோ பைலட் (ரயில் டிரைவர்).<br>**வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்ஸை இவர் வழிநடத்துகிறார்** |
| **டேபிள்ஷ் பாண்டே** | ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டார் |

| | |
|---|---|
| **தீபக் மொகந்தி** | **ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின்** (PFRDA) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். |
| **கியானி இன்ஃபான்டினோ** | **FIFA தலைவராக** 4 வருட காலத்திற்கு (2023-2027) மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார் |
| **நிஷா தேசாய் பிஸ்வால்** | அமெரிக்காவின் உதவி செயலர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டார் |
| **கோர்டன் மூர்** | இன்டெல் இணை நிறுவனர் 94 வயதில் காலமானார் |
| **தில்மா ரூசெஃப்** | பிரிக்ஸ் புதிய வளர்ச்சி வங்கியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். |
| **கிருஷ்ண பிரகாஷ் (ஐபிஎஸ் அதிகாரி)** | இந்திய நுழைவு வாயிலிலிருந்து எலிஃபெண்டா குகைகளுக்கு நீந்திய முதல் நபர் |
| **லெப்டினன்ட் மன்மீத் காலன்** | ஆசியாவைச் சார்ந்த கனெக்டிகட்டின் உதவி காவல் தலைமையாளர் (இந்திய வம்சாவளி சீக்கிய பெண்) |
| **ஷேக் மன்சூர்** | **ஐக்கிய அரபு அமீரகத்தின் துணைத் தலைவர்** |
| **டேனியல் முகே** | ஆஸ்திரேலிய மாநிலத்தில் **பொருளாளராக** ஆன **இந்திய வம்சாவளியைச் சார்ந்த முதல் அரசியல்வாதி.** |

## *முக்கிய தினங்கள்*

| நாள் | தேதி | கருத்துரு |
|---|---|---|
| **உலக கடற்புல் தினம்** | மார்ச் 1 | - |
| **உலக குடிமைப் பாதுகாப்பு தினம்** | மார்ச் 1 | "எதிர்கால சந்ததியினரின் பாதுகாப்பிற்காக உலகின் முன்னணி நிபுணர்களை ஒன்றிணைத்தல் |
| **குடிமைக் கணக்கு தினம்** | மார்ச் 1 | மத்திய அரசின் கணக்குகளை பராமரிப்பதில் ICAS இன் பங்களிப்புகளை அங்கீகரிக்க |
| **உலக வன உயிரினங்கள் தினம்** | மார்ச் 3 | வனவிலங்கு பாதுகாப்புக்கான கூட்டாண்மை |
| **தேசிய பாதுகாப்பு தினம்** | மார்ச் 4 | நமது குறிக்கோள் –தீங்கின்மை |
| **சர்வதேச மகளிர் தினம்** | மார்ச் 8 | " DigitALL : பாலின சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம்" |
| **சர்வதேச பெண் நீதிபதிகள் தினம்** | மார்ச் 10 | "நீதியில் பெண்கள், பெண்களுக்கான நீதி ". |
| **உலக ரோட்டராக்ட் தினம்** | மார்ச் 13 | உலக மத்தியில் நம்பிக்கையை உருவாக்குதல் |

| | | |
|---|---|---|
| **நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம்** | மார்ச் 14 | நதிகளின் உரிமைகள் |
| **சர்வதேச கணித தினம் 2023** | மார்ச் 14 (பை=3.14) | அனைவருக்குமான கணிதம் |
| **உலக நுகர்வோர் உரிமைகள் தினம்** | மார்ச் 15 | தூய்மையான ஆற்றல் மாற்றங்களின் மூலம் நுகர்வோருக்கு அதிகாரமளித்தல் |
| **தேசிய தடுப்பூசி தினம்.** | மார்ச் 16 | **"தடுப்பூசி தேவையற்றதை தடுக்கிறது"** |
| **ஆயுதத் தொழிற்சாலைகள் தினம் (இந்தியா)** | மார்ச் 18 | - |
| **உலகளாவிய மறுசுழற்சி தினம்** | மார்ச் 18 | **ஆக்கப்பூர்வமான புதுமை** |
| **உலக சிட்டுக்குருவி தினம்** | மார்ச் 20 | **நான் சிட்டுக்குருவிகளை விரும்புகிறேன்** |
| **சர்வதேச மகிழ்ச்சி தினம்** | மார்ச் 20 | **விழிப்புடன் இருங்கள் நன்றி உணர்வுடன் இருங்கள் அன்புடன் இருங்கள்** |
| **உலக வாய் சுகாதார தினம்** | மார்ச் 20 | **வாழ்நாள் முழுவதும் புன்னகையுடன் இருப்பதற்காக உங்கள் வாயை நினைத்து பெருமைப்படுங்கள்** |
| **இன பாகுபாடுகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம்** | மார்ச் 21 | **மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் (UDHR) ஏற்றுக்கொள்ளப்பட்ட 75 ஆண்டுகளுக்குப் பிறகு, இனவெறி மற்றும் இனப் பாகுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கான அவசரம்** |
| **உலக கவிதை தினம்** | மார்ச் 21 | **உரைநடையில் கூட எப்போதும் கவிஞராக இருங்கள்** |
| **உலக தண்ணீர் தினம்** | மார்ச் 22 | **தண்ணீர் மற்றும் சுகாதார நெருக்கடியை தீர்க்க மாற்றத்தை துரிதப்படுத்துதல்** |
| **உலக வானிலை நாள்** | மார்ச் 23 | **வானிலை, தட்பவெப்பநிலை மற்றும் நீரின் எதிர்காலம் தலைமுறைகளாக** |
| **ஷஹீத் திவாஸ்** | மார்ச் 23 | **பகத் சிங் , சுக் தேவ் மற்றும் ராஜ் குருவின்** தியாகத்திற்கு அஞ்சலி செலுத்துதல் |
| **உலக காசநோய் தினம்** | மார்ச் 24 | ஆம்! காசநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் |
| **சர்வதேச வலிப்பு நோய் விழிப்புணர்வு தினம் - ஊதா தினம்** | மார்ச் 26 | **"ஸ்டிக்மா"** |

| | | |
|---|---|---|
| **இனவெறி மற்றும் இன பாகுபாட்டிற்கு எதிராக போராடும் மக்களின் ஒற்றுமைக்கான வாரம்** | மார்ச் 21 முதல் 27 வரை | - |
| **பூஜ்ஜிய கழிவுகளுக்கான சர்வதேச தினம் 2023** | மார்ச் 30 | **கழிவுகளைக் குறைத்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றின் நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளை அடைதல்.** |
| **சர்வதேச திருநர்களின் கட்புலன் நிலை தினம்** | மார்ச் 31 | |
| **சர்வதேச போதைப்பொருள் சோதனை தினம்.** | மார்ச் 31 | |

## *செய்திகளில் இடம்பெற்ற இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகள்*

| இராணுவ பயிற்சி | சம்பந்தப்பட்ட நாடுகள் |
|---|---|
| **ஷினியு மைத்ரி** | இந்தியா மற்றும் ஜப்பான் |
| **ஃப்ரின்ஜெக்ஸ்-23** | இந்தியாவும் பிரான்சும் இணைந்து திருவனந்தபுரத்தில் நடத்தின |
| **La Perouse பயிற்சி** | பலதரப்பு-இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து போன்றவை. |
| **தடித்த குருக்ஷேத்திரம்** | இந்தியா மற்றும் சிங்கப்பூர் |
| **கடல் டிராகன் 23 பயிற்சி** | பலதரப்பு நீர்மூழ்கி எதிர்ப்பு போர். |
| **கோப்ரா வாரியர் பயிற்சி** | இந்தியா, பின்லாந்து, சுவீடன், தென்னாப்பிரிக்கா அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் விமானப்படைகள் பங்கேற்கின்றன |
| **கொங்கன் 2023** | இந்தியா & இங்கிலாந்து |
| **வாயு பிரஹார் பயிற்சி** | இந்திய இராணுவம் மற்றும் விமானப்படை. |
| **AFINDEX 2023** | ஆப்பிரிக்கா-இந்தியா இடையிலான 2வது கூட்டுப் பயிற்சி |
| **கடல்சார் கூட்டாண்மை பயிற்சி (MPX)** | ஜப்பான் மற்றும் இந்தியா |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

1. **PALM 400** என்பது **ஏவிஷன் சிஸ்டம்ஸ்** (இஸ்ரேலிய மற்றும் இந்திய நிறுவனங்களின் கூட்டு முயற்சி) மூலம் அமைக்கப்பட்ட **ஆயுதம் தாங்கிய ரிமோட் பைலட் வாகனமாகும்.**
2. **'அப்ரா'** ஆயுத அமைப்பு (MRSAM) என்பது ஒரு அதிநவீன நடுத்தர **அளவிலான வான் பாதுகாப்பு** ஆயுத அமைப்பாகும், இது DRDO மற்றும் இஸ்ரேலிய ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் (IAI) ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.
3. இந்தியக் கடற்படையானது ஒரு தனியார் இந்தியத் தொழில்துறையால் முதன்முறையாக தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் (ASW) நீருக்கடியில் ராக்கெட்டுக்கான( RGB 60 ) ஃபியூஸை உள் நாட்டிலேயே பெற்றுள்ளது.
4. இந்திய ஆயுதப் படைகள் Vayulink எனப்படும் புதிய உள்நாட்டு அமைப்பை நிலைநிறுத்த உள்ளன. இது தளபதிகள் கூட்டுப் போர்க்களத்தில் நட்புப் படைகளை அடையாளம் காண உதவும்
5. SIPRI இன் அறிக்கை - **சர்வதேச ஆயுதப் பரிமாற்றங்களின் போக்குகள்** 2022 – 2018-2011 க்கு இடையில், ஒட்டுமொத்த இறக்குமதியில் 11% சரிவு இருந்தாலும், இந்தியா **உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதியாளராக உள்ளது.**
6. **மிகக் குறுகிய தூர வான் பாதுகாப்பு அமைப்பு (VSHORADS)** ஏவுகணை என்பது DRDO - வால் உள்நாட்டிலேயே **வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.** இது குறுகிய தூரங்களில் **குறைந்த உயர வான்வழி அச்சுறுத்தல்களை** இலக்காகக் கொண்டது .
7. **INS ஆந்த்ரோத்** - ஆழமற்றக் கடற்பகுதியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர்க் கப்பல்களின் வரிசையில் எட்டுக் கப்பல்களுக்கான தயாரிப்பு வரிசையில் தயாரிக்கப்பட்ட இரண்டாவதுக் கப்பலாகும்.

## *குறியீடுகள்*

| அறிக்கை | வெளியிட்டது | தரவரிசை | குறிப்பு |
|---|---|---|---|
| **ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீடு** | ப்ளூம்பெர்க் செய்திகள் | | ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீடு |
| **உலக காற்று தர அறிக்கை** | சுவிஸ் காற்று தர தொழில்நுட்ப நிறுவனம் | மோசமான காற்றின் தரத்தில் இந்தியா **8வது இடத்தில் உள்ளது** | உலகிலேயே **மிகவும் மாசுபட்ட நகரமாக லாகூர்** இருந்தது 2022 ஆம் ஆண்டில் PM2.5 அளவுகளின் அடிப்படையில் உலகின் மிகவும் மாசுபட்ட 50 நகரங்களில் **டெல்லி 4 வது** இடத்தைப் பிடித்தது. |
| **இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்கள் 2022** | புள்ளியியல் துறை அமைச்சகம் | – | |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் . | | |
| **அடிப்படை கால்நடை பராமரிப்புப் புள்ளி விவரங்கள் 2022** | மீன்பிடி, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகம் | – | **சிறந்த உற்பத்தி**<br>a. பால் - **ராஜஸ்தான்**<br>b. முட்டை –<br>**ஆந்திரப் பிரதேசம்** (20.41%)<br>**தமிழ்நாடு** (16.08%)<br>c. இறைச்சி - **மகாராஷ்டிரா**<br>d. கம்பளி - **இராஜஸ்தான்** |
| **உலகளாவிய பயங்கரவாதக் குறியீடு** | பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம் | இந்தியா – 13 வது | ஆப்கானிஸ்தான் -1 வது<br>பாகிஸ்தான் - 6 வது |
| **UN நிலையான வளர்ச்சி அறிக்கை** | உலக மகிழ்ச்சி அறிக்கை 2023 | 146 நாடுகளில் இந்தியா - 126 | முதலிடம் – பின்லாந்து **அறிக்கையில் பூடான் பட்டியலிடப்படவில்லை** |
| **நகர நிதி தரவரிசை 2022** | MOHUA | – | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலை குறித்து கொள்கை வகுப்பாளர்களுக்கு முக்கியமான நுண்ணறிவுகளை வழங்குதல் |
| **தொகுப்பு அறிக்கை** | IPCC | – | 2015 இல் தொடங்கிய சுழற்சியின் போது IPCC ஆல் வெளியிடப்பட்ட 6 அறிக்கைகளின் கண்டுபிடிப்புகளை ஒருங்கிணைக்கும் AR6 இன் இறுதி அறிக்கை. |
| **புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிதி அறிக்கையின் உலகளாவிய பரவல்** | சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனம் | – | – |
| **தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு அறிக்கை 2023** | வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு | – | – |
| **UN நீர் மேம்பாட்டு அறிக்கை** | யுனெஸ்கோ | – | 26% உலக மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| **'சுத்தமான காற்றுக்கான முயற்சி: தெற்காசியாவில் காற்று மாசுபாடு மற்றும் பொது சுகாதாரம்'** | உலக வங்கி | – | உலகின் மிக மோசமான காற்று மாசுபாடு உள்ள 10 நகரங்களில் 9 நகரங்கள் தெற்காசியாவில் உள்ளன. |
| **பாஸ்போர்ட் இன்டெக்ஸ்** | நிதி ஆலோசனை நிறுவனம் ஆர்டன் கேபிடல் | 144 (2022 இல் 138) | – |

## *உச்சி மாநாடுகள்*

| உச்சி மாநாட்டின் பெயர் | நடந்த இடம் | உச்சிமாநாட்டின் நோக்கம் | தொகுத்து வழங்கியது |
|---|---|---|---|
| **பூசா கிருஷி விக்யான் மேளா** | புது டெல்லி | கருத்துரு - 'தினை மூலம் ஊட்டச்சத்து, உணவு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு (ஸ்ரீ அண்ணா)' | இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (IARI) |
| **வருடாந்திர ரைசினா பேச்சுவார்த்தையின் 8 வது அமர்வு** | புது டெல்லி | புவிசார் அரசியல் மற்றும் புவி மூலோபாயம் பற்றிய முதன்மை மாநாடு | |
| **1 வது உலகளாவிய B2B மாநாடு & பாரம்பரிய மருத்துவம் பற்றிய கண்காட்சி** | கவுகாத்தி | ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கீழ் | |
| **தேசிய இளைஞர் பாராளுமன்ற விழாவின் 4வது பதிப்பு** | புது டெல்லி | கருத்துரு : **ஒரு சிறந்த நாளைக்கான யோசனைகள்: உலகத்திற்கான இந்தியா** | |
| **7 வது சர்வதேச தர்ம தம்ம மாநாடு 2023** | மத்தியப் பிரதேசம் | "புதிய சகாப்தத்திற்கான கிழக்கு மனிதநேயம்" | – |
| **பிம்ஸ்டெக் எரிசக்தி மையத்தின் (BEC) நிர்வாகக் குழுவின் 1 வது கூட்டம்** | பெங்களூர் | – | – |

| | | | |
|---|---|---|---|
| **அகில இந்திய பெண்கள் நாட்டுப்புற கலை மாநாடு** | மும்பை | சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு | மகாராஷ்டிரா கலா அகாடமி மற்றும் சங்கீத நாடக அகாடமி |
| **5 வது ஆசியான்-இந்தியா வர்த்தக உச்சி மாநாடு** | கோலாலம்பூர் | இந்தியாவிற்கும் 10 ஏசியான் நாடுகளுக்கும் இடையிலான மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த ஈடுபாட்டை நினைவுகூரும் வகையில் அமைந்தது. | |
| **23வது காமன்வெல்த் சட்ட மாநாடு** | கோவா | **'நல்லாட்சி: சட்டத்தின் ஆட்சி, மக்கள் நலன்'** என்ற கருத்துருவில் மாநாடு நடைபெறுகிறது. | |
| **கேல் மஹாகும்ப் இன் 11வது அமர்வு** | அகமதாபாத்தில் உள்ள சர்தார் படேல் மைதானம் | விளையாட்டுகளில் இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிக்க | |
| **3 வது அமர்வு - பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான தேசிய தளம்** | புது டெல்லி | கருத்துரு: "மாறும் காலநிலைக்கேற்ப **உள்ளூர் பின்னடைவை உருவாக்குதல்"** | MHA<br>NDMA<br>NDRF<br>NIDM |
| **UNFCCC இன் கீழ் பசுமை காலநிலை நிதியத்தின் 35 வது கூட்டம்** | கிகாலி (ருவாண்டா) | – | – |
| **LDC5 இல் 5 வது UN மாநாடு** | **கத்தார்** | கருத்துரு : திறனில் இருந்து செழிப்பை உருவாக்குதல் | ஐ.நா |
| **அறிவியல் மாநாடு மற்றும் அக்ரோ-டெக் கண்காட்சி 2023** | குருகிராம் பல்கலைக்கழகம், ஹறியானா. | கிராமப்புறங்களில் வாழ்வாதார உருவாக்கம் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான CSIR தொழில் நுட்பங்களை விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்கு அறிமுகப் படுத்துதல் | அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் |
| **உலகளாவிய தினைகள் (ஸ்ரீ அண்ணா மாநாடு)** | **புது டெல்லி** | உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான ஊட்டச்சத்து தானியங்கள் (தினை) பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துதல் | – |

| | | | |
|---|---|---|---|
| **சௌராஷ்டிரா தமிழ் சங்கமம் விழா** | **குஜராத்** | சௌராஷ்டிராவிற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான கலாச்சார தொடர்பைக் கொண்டாடுவதற்காக | ஏக் பாரத் ஷ்ரேஷ்தா பாரதத்தின் கீழ் |
| **Labour20 (L20) துவக்க சந்திப்பு** | **அமிர்தசரஸ்** | சமூகப் பாதுகாப்பு மற்றும் பெண் மற்றும் பணியின் எதிர்காலம் ஆகியவற்றின் உலகளாவிய மயமாக்கலை ஏற்றுக்கொள்ளல் | G20 |
| **உலகளாவிய காசநோய் உச்சிமாநாடு** | வாரணாசி, உத்திரப் பிரதேசம் | அதிக சுமை கொண்ட தொற்று நோயான காசநோயை அகற்ற | MHFW |
| **இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய குழுவின் 601வது கூட்டம்** | ஹைதராபாத் | தற்போதைய உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நிலைமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சிரமங்களை மதிப்பிடுவதற்கு. | ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையில் |
| **ஒருங்கிணைந்த தளபதிகள் மாநாடு-2023** | போபால் | கருத்துரு: 'தயார், மறுமலர்ச்சி, தொடர்புடையது'. | |
| **தேசிய இளைஞர் மாநாடு** | **புது டெல்லி** | அர்பன்20 (U20) மற்றும் யூத் 20 (Y20) முன்னுரிமைப் பகுதிகள் குறித்து ஆலோசனை நடத்த இளைஞர்களை ஒன்றிணைத்தல். | நகர்ப்புற விவகாரங்களுக்கான தேசிய நிறுவனம், MOHUA, இளைஞர் விவகாரத் துறை |

## செய்திகளில் இடம்பெற்ற இணையதளம்

| இணைய முகப்பு | நோக்கம் | தொடங்கப்பட்டது |
|---|---|---|
| **குறைகள் மேல் முறையீட்டு குழு தளம்** | சமூக ஊடக நிறுவனங்களுக்கு எதிராக புகார் அளிக்க வேண்டும். | MeitY |
| **PUShp தளம்** | அதிக தேவை உள்ள காலத்தில் மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்வதற்கான முயற்சி | மின்சாரத்துறை அமைச்சகம் |
| **iDEEKSHA தளம்** | தொழில்துறை கார்பனைசேஷன் மற்றும் EE அறிவு-பகிர்வு தளம் | மின்சாரத்துறை அமைச்சகம் |
| **ஜர்னியோஜன் தளம்** | தனியார் துறையில் 75% உள்ளூர் ஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கான வேலை வாய்ப்பு தளம். | ஜார்கண்ட் அரசாங்கம் |

| | | |
|---|---|---|
| **வருடாந்திர தகவல் அறிக்கைகள் பயன்பாடு (AIS)** | வரி செலுத்துவோர் ஒவ்வொரு பரிவர்த்தனை பற்றிய விரிவான தகவலை வரி செலுத்துவோருக்கு வழங்குவதற்கும் அவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்குமான தளம் | **வருமான வரித்துறை** |
| **Call Before You Dig** **செயலி** | ஒருங்கிணைக்கப்படாத தோண்டுதல் மற்றும் அகழ்வாராய்ச்சியின் காரணமாக **ஒளியிழைக் குழாய்கள்** போன்ற அடிப்படை சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கம் | தொலைத்தொடர்பு துறை |
| **DigiClaim** | இது தேசியப் பயிர்க் காப்பீட்டுத் தளத்தில் எண்ம முறை உரிமை கோரல் தீர்வுத் தொகுதி. | **பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY)** |
| **வேத பாரம்பரிய தளம்** | இது வேதங்களில் உள்ள செய்தியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வேத காலப் பாரம்பரியம் தொடர்பான எந்தவொருத் தகவலுக்கும் இது ஒரு ஒற்றைத் தீர்வாக இருக்கும். | MHA |
| **CRISP (இரப்பர் தகவல் அமைப்பிற்கான விரிவான இயங்குதளம்)** | இரப்பர் சாகுபடியைப் பற்றி விவசாயிகளுக்குத் தெரிவிக்க மற்றும் இணையம் வழியாக தீர்வுகளை வழங்குகிறது | இரப்பர் கழகம் |

## புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்

| புத்தகத்தின் பெயர் | ஆசிரியர் பெயர் | வெளியிட்டது |
|---|---|---|
| 'இந்தியாவின் தடுப்பூசி வளர்ச்சிக் கதை - கௌபாக்ஸ் முதல் மைத்ரி தடுப்பூசி வரை ' | சஜ்ஜன் சிங் யாதவ் (கூடுதல் செயலாளர்) | டாக்டர் மன்சுக் மாண்டவியா |
| "As Good as My Word," | கே. எம்.சந்திரசேகர் | |
| முண்டக உபநிடதம்: அமரத்துவத்திற்கான பாலம் | கரண் சிங் | இந்திய துணை குடியரசுத்தலைவர் - **ஜக்தீப் தங்கர்** |
| "பின் : சீருடையின் பின்னால் இருக்கும் மனிதன்" | ரச்சனா பிஸ்வத் ராவத் | |
| "போர் மற்றும் பெண்கள்" | டாக்டர் எம்.ஏ.ஹசன் | ஜெனிவாவில் **UNHRC இன் 52வது அமர்வின்** போது தொடங்கப்பட்டது. **1971 ஆம் ஆண்டைய போரின்** போது பாகிஸ்தான் இராணுவத்தால் நடத்தப்பட்ட பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட **வங்காளப் பெண்களின்** துன்பத்தை எடுத்துக்காட்டுகிறது. |

## செய்திகளில் இடம்பெற்ற உயிரினங்கள்

| உயிரினங்கள் | ஏன் செய்திகளில் இடம்பெற்றன ? |
|---|---|
| **இந்திய ஓநாய் (கேனிஸ் லூபஸ் பாலிப்ஸ்)** | முதன்முறையாக, **ஜூனாகத்தின் சக்கர்பக் விலங்கியல் பூங்காவில்** இருந்து வளர்க்கப்படும் 10 **இந்திய சாம்பல் ஓநாய்களை விடுவிக்க குஜராத்** வனத்துறை திட்டமிட்டுள்ளது. |
| **குதிரைவாலி நண்டுகள்** | • சந்திப்பூர் மற்றும் பலராம்கடி கடற்கரையிலிருந்து மறைந்துவிடும்<br>• வாழும் புதைபடிவங்கள் |
| **நீண்ட வாலுடைய வாத்துகள்** | • 84 ஆண்டுகளுக்குப் பிறகு காஷ்மீரில் கண்டுபிடிக்கப்பட்டது.<br>• IUCN நிலை - பாதிக்கப்படக்கூடியது<br>• ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக் பகுதிகளில் பரவிக் காணப்படுகிறது |
| **ஸ்மேவ் வாத்து இனங்கள்** | • காஷ்மீரில் 116 ஆண்டுகளுக்குப் பிறகு காணப்பட்டது<br>• IUCN – குறைவான கவலை<br>• யூரேசியா மற்றும் ஐரோப்பா முழுவதும் பரவிக் காணப்படுகிறது |
| **“ஜிம்னோதோராக்ஸ் தமிழ்நாட்டுயென்சிஸ்”** | • அஞ்சாலை மீனின் புதிய இனத்தை ICAR கண்டுபிடித்துள்ளது<br>• கடலூர் கடற்கரையில்<br>• **பொதுவான பெயர்: தமிழ்நாடு** பழுப்பு நிற அஞ்சாலை மீன் |

## செய்திகளில் இடம்பெற்ற முக்கிய இடங்கள்

| இடத்தின் பெயர் | மாநிலம்/நாடு | சிறப்பு பெறுவது |
|---|---|---|
| **சஞ்சய் துப்ரி புலிகள் காப்பகம்** | மத்தியப் பிரதேசம் | பாதுகாப்பு மண்டலத்தில் ஒரு புலி மின்சாரம் தாக்கி இறந்ததாக கூறப்படுகிறது |
| **தாஷிடிங் (பௌத்த) மடாலயம்** | சிக்கிம் | பும்சு திருவிழா |
| **டிரிண்டேட் தீவு** | பிரேசில் | பிளாஸ்டிக் பாறைகள் கண்டெடுக்கப்பட்டன. **பச்சை ஆமைகளுக்கு** இது ஒரு முக்கியமான பாதுகாப்பு இடமாகும் |
| **ஜம்ர்கோத்ரா மற்றும் ஜவார் தளங்கள்** | இராஜஸ்தான் | **புவிசார் பாரம்பரிய தளங்களாக** அறிவிக்கப்பட்டது. ஜம்ர்கோத்ரா - பாஸ்பேட் நிறைந்த புதைபடிவ பூங்கா ஜவார் - உலகின் மிகப் பழமையான துத்தநாக உருகும் தளம் |
| **பட்டாம்பூச்சி சுற்றுச்சூழல் பூங்கா** | சோட்டகோலா (திரிபுரா) | **வடகிழக்கில்** 1வது பட்டாம்பூச்சி பூங்கா |

# *விளையாட்டுச் செய்திகள்*

1. **2023 ஆம் ஆண்டின்** கராபோ கோப்பையை **மான்செஸ்டர் யுனைடெட்** வென்றது (கால்பந்து)

2. **மகாபலிபுரத்தில் நடைபெற்ற 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில்** 9/11 என்ற சாதனை முறியடித்து தங்கப் பதக்கத்தை வென்றதற்காக இந்திய கிராண்ட் மாஸ்டர் **டி குகேஷுக்கு ஆசிய செஸ் கூட்டமைப்பு (ACF) சிறந்த வீரர்** விருது வழங்கி கௌரவித்துள்ளது.

3. தடைசெய்யப்பட்ட அனபோலிக் ஸ்டீராய்டைப் பயன்படுத்தியதற்காக இந்தியாவின் தலைசிறந்த **மும்முறை நீளம் தாண்டுதல் வீராங்கனை ஐஸ்வர்யா பாபு** மற்றும் தடகள **வீரர் எஸ் தனலட்சுமிக்கு** தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமை (NADA) 4 ஆண்டுகள் தடை விதித்துள்ளது.

4. **பஹ்ரைன் கிராண்ட் பிரிக்ஸ் 2023** *சீசன்* தொடக்கத்தில் **மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் வெற்றி பெற்றார்.**

5. ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பளுதூக்கும் வீராங்கனை **மீராபாய் சானு** பொது வாக்கெடுப்புக்குப் பிறகு **2022 ஆம் ஆண்டின் 'பிபிசி இந்திய விளையாட்டு வீராங்கனை' விருதைப்** பெற்றுள்ளார்.

6. மதிப்புமிக்க **அர்ஜுனா விருதைப்** பெற்ற தமிழகத்தின் **முதல் பேட்மிண்டன் வீராங்கனை** மற்றும் முதல் **காதுகேளாதப் பெண்மணி என்ற பெருமையை ஜெர்லின் அனிகா** பெற்றார்.

7. கர்நாடகாவின் பெல்லாரியில் நடைபெற்ற இந்திய ஓபன் ஜம்ப்ஸ் போட்டி 2023ல் (8.42 மீ) தங்கப் பதக்கம் வென்று புதிய தேசிய சாதனையை **ஜெஸ்வின் ஆல்ட்ரின்** படைத்தார்.

8. **இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டி "BNP Paribas Open" என்றும் அழைக்கப்படுகிறது.**

| வகை | வெற்றியாளர் |
|---|---|
| **மகளிர் ஒற்றையர்** | எலெனா ரைபாகினா |
| **ஆண்கள் ஒற்றையர்** | கார்லோஸ் அல்காராஸ்(ஸ்பெயின்) |
| **மகளிர் இரட்டையர்** | பார்போரா கிரெஜ்சிகோவா/ கேத்ரினா சினியாகோவா |
| **ஆண்கள் இரட்டையர்** | ரோஹன் போபண்ணா & மேத்யூ எப்டன் |

9. ரெட் புல்ஸ் **செர்ஜியோ பெரெஸ் சவுதி அரேபிய கிராண்ட் பிரிக்ஸ் 2023** ஐ வென்றார்

10. 2023 **தாயுவான் வில்வித்தை ஆசிய கோப்பை** (நிலை-I)போட்டியில் இந்தியா 5 தங்கம், 4 வெள்ளி மற்றும் 1 வெண்கலம் வென்றது.

11. தேசிய மகளிர் ஹாக்கி அணியின் மிட்பீல்டர் சலீமா டெட் AHF **விளையாட்டு வீரர்கள் தூதராக** நியமிக்கப்பட்டார்

12. மும்பையில் உள்ள **பிரபோர்ன் மைதானத்தில்** நடைபெற்ற மகளிர் பிரீமியர் லீக் (WPL) 2023 இறுதிப் போட்டியில், **மும்பை இந்தியன்ஸ் அணி,** டெல்லி கேபிடல்ஸ் அணிக்கு எதிராக ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

13. **புதுடெல்லியில் நடைபெற்ற IBA மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்** 2023 இன் 13வது பதிப்பில் இந்தியா ஒரு மேலாதிக்க சக்தியாக உருவெடுத்தது .

14. முன்னாள் மான்செஸ்டர் யுனைடெட் மேலாளர் **சர் அலெக்ஸ் பெர்குசன்** மற்றும் முன்னாள் அர்செனல் தலைவர் **ஆர்சென் வெங்கர்** ஆகியோர் பிரீமியர் லீக் ஹால் ஆஃப் ஃபேமில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த மதிப்புமிக்க பட்டியலில் **மேலாளர்கள்** இடம் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

15. **வேதாந்தாவின் ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட்** மற்றும் **ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கம் இணைந்து ஜெய்ப்பூரில் உள்ள சோன்ப் நகரில்** உலகின் மூன்றாவது பெரிய கிரிக்கெட் வளாகத்தை உருவாக்க உள்ளன. இந்த மைதானத்திற்கு **அனில் அகர்வால் சர்வதேச கிரிக்கெட் மைதானம்** என்று பெயரிடப்படும்.

16. 13 வதுஉலக மகளிர் குத்துச்சண்டை **சாம்பியன்ஷிப் புதுடெல்லியில் நடைபெற்றது**.

| எடை வகுப்பு | விளையாட்டு வீரர் பெயர் | நாடு | பதக்கம் |
|---|---|---|---|
| **நடுத்தர எடை** | லோவ்லினா போர்கோஹைன் (75 கிலோ) | இந்தியா (அஸ்ஸாம்) | தங்கம் |
| **குறைந்தபட்ச எடை** | நிது கங்காஸ் (48 கிலோ) | இந்தியா (ஹரியானா) | தங்கம் |
| **லைட் ஃப்ளைவெயிட்** | நிகத் ஜரீன் (50 கிலோ) | இந்தியா (தெலுங்கானா) | தங்கம் |
| **லைட் ஹெவி வெயிட்** | சவீட்டி பூரா (81 கிலோ) | இந்தியா (ஹரியானா) | தங்கம் |

* * * * * * *

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS